# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 04.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10491/D/2019**

திருமதி. A. ரேவதி -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், -- பொது அதிகார அமைப்பு
முதன்மைக்கல்வி அலுவலகம், விழுப்புரம் மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 13.08.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 14.09.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 17.10.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திருமதி. A. ரேவதி மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு. சேவியர் சந்திரகுமார், முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், முதன்மைக்கல்வி அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் விழுப்புரம் மாவட்டக்கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் பட்டியல், அரசு உதவி பெறும் பள்ளிகளின் நிர்வாக கோப்புகளை கண்காணிக்கும் பணிகள் தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்ட அலுவலக உதவியாளர்களின் விவரங்கள், விழுப்புரம் மாவட்டத்தில் அரசு உதவி பெறும் பள்ளிகள் கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை வழக்குகள் போடப்பட்டது, கடந்த 5 ஆண்டுகளில் உயர்நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்ட வழக்குகள், இது தொடர்பாக வழக்கறிஞர்களுக்கு ஒதுக்கப்பட்ட கட்டணங்கள், வங்கி மற்றும் கருவூலகக் கணக்கு விவரங்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல்

குற்றச்சாட்டுகள் தொடர்பாக பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் விவரம், ஆங்கில வழிக்கல்விக் கூடங்களுக்கான கட்டணக்கொள்ளை மீதான புகார்கள், லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு மீது புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காத விவரம் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 12 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற மனுதாரர் தனக்கு நாளதுவரை தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் திருமதி. ரேவதி மற்றும் அவரது கணவரும் ஒரே பொருள் தொடர்புடைய தகவல்கள் கோரினார்கள் என்றும், இப்பொருள் தொடர்பான தகவல்களை அவரது கணவர் திரு. ஏழுமலை என்பவருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டதாகவும், ஒரே பொருள் உடைய தகவல்கள் என்பதால் மனுதாரரின் கணவருக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும், இம்மனுவின் மனுதாரர் திருமதி. ரேவதிக்கும் என்பவருக்கும் பொருந்தும் என கருதியதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், ஒரே பொருள் உடைய தகவல்களை மனுதாரர் மற்றும் அவரது கணவரும் கோரியுள்ளதால், பொது அதிகார அமைப்பினால், மனுதாரரின் கணவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள், இம்மனுவின் மனுதாரர் திருமதி. ரேவதிக்கும் பொருந்தும் என்று முடிவு செய்து, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 10491/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்,
முதன்மைக்கல்வி அலுவலகம், விழுப்புரம் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திருமதி. A. ரேவதி, க/பெ. ஏழுமலை,
வடக்குத் தெரு, காட்டு எடையார் (அஞ்சல்),
உளுந்தூர்பேட்டை (வட்டம்), ஜி, அரியூர் (வழி),
விழுப்புரம் மாவட்டம் - 605 751.

Copy to: File
SNPA 06.11.2020